விற்பதிலே அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஜமுனாமுத்தூர் மலைப் பகுதியிலே கடுக்காய், கற்றாழை போன்றவற்றை விற்றுப் பிழைக்கும் மலைவாழ் மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காக, அங்கே இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா அல்லது தனியார்கள் அங்கே சென்று கொள்முதல் செய்வதற்கான மையம் உருவாக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் முன் வந்தால் அதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

கட்டட வசதி

***96839—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாநகரில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 592, நாள் 15–10–2008–ல் ரூ.138.00 இலட்சம் (ரூபாய் நூற்று முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 30]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் போட்ட கேள்வி. இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரூ.138 இலட்சத்தில் கட்டடம் கட்டப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும்? இப்பொழுது வேலூர் வட்டாட்சியர் அலுவலக எல்லை பரந்து விரிந்து இருக்கின்ற காரணத்தாலே, வேலூர் வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டு வேலூரில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக—வேலூர் கோட்டையிலே அப்பொழுது வட்டாட்சியர் அலுவலகம் நடைபெற்று வந்தது. அதை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென்று தொல்பொருள் ஆராய்ச்சி மையம் அதற்கு வேண்டுகோள் விடுத்த காரணத்தால்—இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இதற்காக நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களின் வேண்டுகோளையும் ஏற்று அன்றையதினம் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தப் பணி நடைபெற்று வருகிறது. தற்போது பணிகள் முடியும் தருவாயில் இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில் கணக்கெடுப்புப் பணி நடந்து கொண்டிருக்கிற இந்த வேளையில், சில பேர் தங்கள் சொந்த இடங்களில் குடிசை போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது நத்தம் பட்டாவாக இல்லாத காரணத்தினாலே அங்கே கணக்கெடுப்பு நடக்காமல் இருக்கிறது. ஆகவே, கொல்லைமேடுகளில் தங்களுடைய நிலங்களில் குடிசை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வீடுகளைக் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு உடனடியாக sub-division செய்து, அதை நத்தம் பட்டாவாக மாற்றித் தர . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கேட்டுவிட்டு, இப்போது பட்டாவிற்குப் போய்விட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகம் வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட கட்டடத்தில் உள்ளது. மிகக் குறுகிய இடமாக, நெருக்கடியாக இருக்கிறது. கட்டடம் பாழடைந்து கொண்டிருக்கிறது. புதிய கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம கடந்த காலத்தில் கேள்வி நேரத்தில் பல முறை வற்புறுத்திக் கேட்டு, கட்டடம் கட்டப்படும் என்று அவர்களும் இரண்டு முறை வாக்குறுதி அளித்தார்கள். மானியக் கோரிக்கையின்மீது பதிலளிக்கிற நேரத்தில்கூட மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அறிவித்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, நடப்பாண்டிலாவது மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 2006–ல் 5–வது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே தமிழ்நாட்டிலே 9 வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருப்பதைக் கணக்கிலேகொண்டு, அதற்காகத்தான் முதலிலே நிதியொதுக்கீட்டை 10 கோடி ரூபாய்க்கு மேல் அன்றைக்கு முதல்வர் அவர்கள் ஒதுக்கி, அந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

2010 ஏப்ரல் 30]

இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும் கேட்டார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலே இந்த ஆட்சிக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிதிநிலையைக் காரணம் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும், தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்பதிலே கலைஞர் அரசு மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் சேர்ந்து இப்போது என்னிடம் இருக்கக்கூடிய கணக்கெடுப்பின்படி இன்னும் பழுதடைந்த கட்டடங்கள் என்பது மாநில அளவிலே 12 வட்டாட்சியர் அலுவலகங்களை எனக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு அரசுத் துறை அலுவலர்கள் குறிப்பிட்டிருப்பது, மிகவும் பழுதடைந்த நிலையிலே இருப்பது 12 வட்டாட்சியர் அலுவலகங்கள். ஒவ்வொரு ஆண்டும் மூன்று, மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நாம் தந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுடைய கருத்துரையையும் நிச்சயமாக அரசு ஆய்ந்து பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா அதியமான்.

திருமதி லதா அதியமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலுள்ள வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அரசினுடைய கொள்கையே—மிகவும் பழுதடைந்திருக்கின்ற கட்டடங்களை மாற்றியமைப்பதுதான் அரசின் கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்கூட மிகவும் பழுதடைந்த காரணத்தால் இப்பொழுது ரூபாய் 25 கோடியிலே கட்டப்பட்டு வருகிறது. திருச்சியிலே கிட்டத்தட்ட ரூபாய் 12 கோடி அளவிலே அந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

சொன்னதுபோல, அந்தக் கட்டடங்களின் ஆண்டு மதிப்பு, அவை எந்த அளவுக்குப் பழுதடைந்து இருக்கின்றன என்பதையெல்லாம் கருத்தில் கொண்டு, நிச்சயம் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னை, தென் சென்னை என்று இரண்டே இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் செயல்பட்டு வந்த நிலையில், 1965—க்குப் பிறகு சென்னையில் 5 வட்டாட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொடர்ந்து 45 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த ஐந்தே ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்கள்தான் இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பெருகிவிட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதல் சட்டமன்றத் தொகுதிகள் வந்ததற்குப் பிறகு, கூடுதலாக வட்டாட்சியர் அலுவலகங்கள் வேண்டுமென்ற கருத்துரையின் அடிப்படையில், பெரம்பூர், எழும்பூர் வட்டங்களை இரண்டாகப் பிரிப்பது குறித்து 2005 ஆம் ஆண்டு கருத்துரு அனுப்பப்பட்டது. ஆகவே, 5 வட்டாட்சியர் அலுவலகங்களையும் மாற்றி, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வட்டாட்சியர் அலுவலகம் என்று பிரிக்க வேண்டும். இலவசத் திட்டங்களெல்லாம் அந்த வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டியிருப்பதாலும், சான்றிதழ்கள் மற்றும் மக்கள் நலப் பணிகள் அனைத்தும் வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலமே நடைபெறக்கூடிய சூழ்நிலை இருப்பதாலும், அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, வட்டாட்சியர் அலுவலகங்களைக் கூடுதலாக ஏற்படுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் குறிப்பிட்டதுபோல, சென்னை, சென்னையைச் சுற்றியிருக்கிற புறநகர்ப் பகுதி, அருகில் இருக்கின்ற நகரங்களிலே கூடுதல் வட்டாட்சியர் அலுவலகங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம்—

2010 ஏப்ரல் 30]

இதிலே அம்பத்தூர், மாதவரம் ஆகியவை திருவள்ளூர் மாவட்டத்தில் வருமென்று நினைக்கின்றேன்—திருவள்ளூர் மாவட்டத்தையொட்டி சென்னை இருக்கிறது. இந்தப் பக்கம் தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர். இவற்றில் தாம்பரம் என்பது ஒரே வட்டமாக இருந்தது. ஒரே வட்டமாக இருந்ததை இன்றைக்கு தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் என்று 3 வட்டங்களாகக் கடந்த ஆண்டு பிரித்த் ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, மாதவரம், அம்பத்தூர் வட்டங்கள்; அவற்றை நாம் பிரித்து, இன்றைக்குச் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இப்பொழுது நத்தம் சர்வே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் என்னுடைய பதிலுரையில்கூடச் சொன்னேன், சென்னை மட்டும்தான் பாக்கி இருக்கிறது என்று. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, சென்னையிலும் வட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்ற கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. வருகிற ஆண்டிலே நிச்சயம் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

நூற்பாலை

***101713—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*